www.tamilarangam.net

## விடுதலைப் போரில் பெண்கள்

சமுதாயச் சடங்கு, கலாச்சாரம் என்கின்ற பெயரில் தமிழ்ப் பெண்களின் உரிமைகள் காலம் காலமாக மறுக்கப்பட்டு, அல்லது மறைக்கப்பட்டு வந்துள்ளது. பிள்ளைகளைப் பெற்று வளர்க்கவும், வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கும், குடும்பத் தலைவனின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குமாகவே பெண் படைக்கப்பட்டாள் என்கின்ற ஒரு கூற்று, பல தலைமுறைகளாக மக்கள் மத்தியில் நிலவி வந்தது. பல்வேறு வடிவங்களில் சமுதாயக் கொடுமைகளை அனுபவித்து வரும் பெண்கள், தமது நிலையுணர்ந்து அவற்றின் தாக்கங்களில் நசிவுண்டு நலிந்து போகாது, தம்மை விடுவித்துக் கொள்ள முடியாத வாறு, அதிகார வர்க்கம் சர்வதேச ரீதியில் சட்டங்களை இயற்றிப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளது.

பெண்ணின் உரிமைகள் பறிக்கப்படும்பொழுது மானம் மரியாதை என்கின்ற பெயரில், அவளது வாய்க்குப் பூட்டுப் போட்டு அமுக்கி விட, சமுதாயக் கூறுகள் முன்வருகின்றன. ஆனால் அடக்கு முறைக் கொடுமைகள் அதிகரித்த நாடுகள் விடுதலை பெறத் துடித்த காலங்களில் பிரச்சனையின் வடிவங்கள் இயங்கியல் ரீதியில் அலசி ஆராயப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இவ்ஆய்வின் அடிப்படையில் நெறிசார்ந்து ஒழுங்கமைக்கப்பட்ட புரட்சிப் போராட்ட நடவடிக்கைகளில், பெண்கள் தன்னம்பிக்கையோடும் துணிவோடும் ஈடுபடும் போது, உருவாக்கப்படும் சட்ட நுணுக்கங்களில் இவர்களின் உரிமைகளும் முற்றாக ஏற்றுக் கொள்ளப்படும் என்பதற்கு, உருவாக்கப்பட்டுள்ள சோலிச நாடுகள் சான்று பகர்கின்றன. பல தலைமுறைகளாக ஒடுக்கப்பட்டு வந்த இனம் தன்னிலையுணர்ந்து அரசு அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து, மக்களடிப்படையில் பரவலாக்கப்பட்ட ஒரு போராட்டத்திட்டத்தை முன் வைக்கும் பொழுது பெண்களின் பங்கும், அதாவது அதிகார பூர்வமான நடவடிக்கையில் அவர்களின் செயற்பாடும் அத்தியாவசியமாகின்றது. இக் கால கட்டத்தில் தான் இது வரை காலமும் இவர்கள் உள்ளத்தை உறுத்திவந்த பிரச்சனைகளின் தாக்கங்கள் வெளிப்பட்டு, நிரந்தரமாக அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்ட, ஒட்டு மொத்த போராட்ட வடிவத்தினுள் அடக்கப்படுவது இயங்கியல் வரலாற்று உண்மையாகும்.

வேலைக்காரிகள் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்க முற்போக்குவாதிகள் விரும்பியதும் எழுதியதும் உண்மை. ஆனால் அவர்கள் மனத்தில் இக்கருத்துக்கள் ஊடுருவிப்பாய்ந்து அவர்கள் எண்ணப்பாட்டில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி; வாழ்வின் மறுமலர்ச்சி உண்டாக்கும் வகையில் அணி திரட்ட முயலவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடித்துக் கும்மாளமடித்து, குதிரைப் பந்தயத்தில் பணத்தை விரயமாக்கி ஊதாரியாகத் திரியும் ஒரு மனிதன் கூட, கணவன் என்கிற உணர்வதில், பெண்ணின் திறமையையும் சக்தியையும் பயன்படுத்தி, குடும்ப பாரம் முழுமையையும், அவள் தலையில் கட்டி அல்லற்பட்டு அவதியுற வைக்கிறானே தவிர, வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பைத் தானே வைத்துக் கொள்ள விரும்புகிறான். "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்", என்கின்ற முதுமொழிகளுக்கேற்ப வாழ வேண்டுமே என்கிற எண்ணத்தில், பெண் இவற்றைப் பொறுத்துக் கொள்ள தன்னை பக்குவப்படுத்திக் கொள்கிறாள். இச் சமுதாயச் சுரண்டல்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் மார்க்கத்தை விட்டு மூலைக்குள் ஒதுங்கியிருக்கும் பெண்ணிற்கு எடுத்துக்கூறி, அவர்களை உணர்ந்து கொள்ள வைக்காத வரை, விடுதலை என்கின்ற சொல்லுக்கு அர்த்தமே இல்லாது போய்விடும்.

விடுதலைப் போராட்ட ஆரம்பப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திய பெண்களின் நிலைமையும்கூட இந்த அடக்குமுறைச் சுரண்டலுக்கு விதிவிலக்கானதல்ல. குடும்பப் பின்னணியிலானாலும் சரி, சமுதாய முன்னேற்றத்திற்கு சங்கங்களிலானாலும் சரி, இன விடுதலை அல்லது வர்க்கத்தின் புரட்சி அமைப்புக்களிலானாலும் சரி, பெண்களின் திறமையையும் சக்தியையும் பயன்படுத்த முயல்வார்களே தவிர அமைப்பு நிர்வாகத்திலும் பொறுப்பிலும் அவர்களின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்த முடியாதவாறு அவர்களது மனநிலை மழுங்கிப் போய் காணப்படுவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது. தப்பித் தவறி ஒரு பெண் தன் சொந்த இன்ப துன்பங்களைப் புறக்கணித்து, தனக்கு ஏற்பட்ட கொடுமை நிறைந்த அனுபவங்களின் தாக்கங்களைப் பொருட்படுத்தாது, சமுதாய இன விடுதலைப் போராட்டப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி முன்னுக்கு வந்துவிட்டாளேயானால், அவளது முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டி வலுவூட்டி வந்த கணவன் கூட அதைப் பொறுத்துக் கொள்ள அல்லது ஏற்றுக் கொள்ள முடியாது தவிப்பதற்கும், நமது தமிழ் சமுதாயப் பின்னணியே காரணமாகின்றது. இச்சூழ்நிலைகளை ஆராய்ந்து, மனித சக்தியை விரயமாக்காது, திறமையுள்ள பெண்களின் ஒத்துழைப்புடன் விடுதலைப் போராட்டப் பயணத்தைத் தொடர வேண்டும் என்கின்ற உண்மையை உறுதிப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் நம்முடையதேயாகும்.

தங்களைத் தாங்களே தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும் எண்ணிக் கொண்டு, பொதுவுடமைப் பெட்டகத்தின் திறவுகோல் தங்கள் கரங்களில் மட்டும் தான் தரப்பட்டுள்ளதாகவும் ஈழவிடுதலைப் போராட்டம் தங்களது தலைமையில் தான் உருவெடுக்க முடியும், என்றும் இளைஞர் அணியினரை நம்பவைக்கும் மாண்டரும் நம்மிடையே உலா வருகின்றனர். அதிகரித்து வரும் நெருக்கடி நிலைமைகட்கேற்ப இளைஞர்களின் அரசியல் அறிவும் ஈடுபாடும் வளர்ச்சி அடைகின்றது. இப்போக்கிற்கு ஈடுகொடுத்து அவர்களை வழிநடத்த முடியாதவாறு அன்றாடப் பிரச்சினைகள் தலைதூக்கும் போது அவற்றைத் தீர்த்து இணைத்துச் செல்ல வக்கில்லாது பரிதவிக்கும் தலைவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களையும், நாம் காண்கின்றோம். இச்சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை வெற்றி பெற்று வந்தாலும் காலப் போக்கில் நல்ல கருத்துக்களால் வளர்க்கப்படும் போராளிகள் உண்மை நிலையை உணர்ந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டு, இப்பெரும்பான்மை இனங் காணப்பட்டு தாமாகவே உதிர்ந்து போய்விடும் என்பது புரட்சிப் புரவலன் லெனின் கருத்துக் கொத்துக்களில் ஒன்றாகும். பொதுமை பொதுவுடமை தர்க்கீகம் என்பன அந்த வார்த்தைகளை உதிர்ப்பவர்களின் சொந்த வாழ்வில் புதுமைப் புரட்சியை ஏற்படுத்தாத வரை மக்களால் இக்கருத்துக்களைப் புரிந்து கொள்ள வைக்கவும் முடியா ஒரு சூழ்நிலை உருவாவதும் உண்மையாகும்.

இன்று இலங்கை வாழ்தமிழ் பேசும் இனம் எதிர் நோக்கியுள்ள அடக்குமுறைக் கொடுமைகள் ஒரு பக்கமும் சர்வதேசப் படைகளின் குவிப்பு மற்றொரு புறமுமாக மக்களை நிலையான ஒரு பயங்கரச் சூழ்நிலையிலும் தொடர்ந்த அழிவு நிலையிலும் வைத்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. எனவே எமது பிரச்சினைகளை சர்வதேசப் பிரச்சினைகளுடனும், நிலமைகளுடனும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நம்முடையதாகும். அத்தோடு இப்படைகளின் கூட்டு முயற்சியின் பின்னணியையும் ஆழமாக பார்க்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். உலக வல்லரசுகளுக்கிடையிலான அணுவாயுதப் போட்டி தலை தூக்கியுள்ள இக்கால கட்டத்தில் எமது விடுதலைப் போராட்டமும் கூர்மையடைந்துள்ளது என்பது கண்கூடு. அத்தோடு உலகின் பல பாகங்களிலும் எல்லை, இன, நிற, மொழி, சாதி அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்ட நிலமைகளையும், இவற்றை உடைத்தெறியும் வர்க்க அடிப்படையிலான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சக்தியின் தோற்றத்தையும் நிலமையையும், அதன் வளர்ச்சியையும் காண முடிகின்றது.

இலங்கைத் தீவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியாது தவிக்கும் முதலாளித்துவ சோஷலிச அரசு இன்று வல்லமை பொருந்திய பயங்கரவாதக் கும்பலின் உதவியை நாடியுள்ளது. முதலாளித்துவ போக்குகளின் பயங்கரத் தாக்குதலில் இருந்தும், ஒடுக்குமுறைக் கொடுமைகளில் இருந்தும் நம் இனம் விடுதலை பெற வேண்டுமேயானால் அதி உன்னத கட்டுப்பாட்டின் அடிப்படையில் உருவான, ஒழுங்கமைக்கப்பட்ட போர்த் தந்திர முறைகளைக் கையாளக் கூடிய, தன்னலமற்ற போராளிகளை உள்ளடக்கிய ஒரு இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி அவசியமாகின்றது.

1948ல் இலங்கை சுதந்திரமடைந்த போது, ஆட்சிப் பொறுப்பை மட்டும் பெரும்பான்மை வாக்குப் பலத்தின் கரங்களில், பிரித்தானிய அரசு கையளித்திருந்தது. ஆனால் 72 மே 22ல் தான் நமது தேசிய இறைமையையும் ஆட்சி உரிமையையும் பெரும்பான்மை வாக்குப் பலத்தின் துணை கொண்டு கைப்பற்றிக் கொள்ள எண்ணமிட்ட இலங்கை அரசு "ஸ்ரீலங்கா குடியரசு" நாடாகப் பிரகடனப்படுத்தியது. பெரும்பான்மை வாக்குப் பலத்தால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது இறைமை பறிக்கப்படுவதை உணர்ந்து கொண்ட தமிழ் மக்களாகிய நாம் அந்த அரசியல் யாப்பை எதிர்த்து போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

இலங்கைப் பொருளாதாரத்தின் அன்னியச் செலவாணியில் 70%-தை உழைத்துத் தரும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை 49ல் இலங்கையில் பறிக்கப்பட்ட போது கைதேர்ந்த சர்வதேச முதலாளித்துவ சக்திகள், இனரீதியாகவோ அல்லது வர்க்க ரீதியாகவோ இப்பிரச்சினை தலை தூக்காது தடுத்து விட்டனர். இலங்கைத் தீவில் நிலை கொண்டிருந்த இந்திய எதிர்ப்புவாத சக்திகளினதும் நடவடிக்கை சுரண்டல் முறைக்கு ஏதுவாக அமைந்திருந்தது. இப்படியாக ஆரம்பிக்கப்பட்ட ஒடுக்குமுறையின் தாக்கம் இன்று தமிழ் பேசும் இனத்தை ஒன்றிணைத்து அதன் ஒட்டு மொத்த விடுதலைப் போராட்ட வடிவமாக அமைந்துள்ளது.

இவற்றின் பலாபலன்களை உணர்ந்து கொண்ட மக்கள், தமது திறமையில் நம்பிக்கை வைத்து, தமக்கே உரித்தான தன்னடக்கம் நிறைந்த கட்டுப்பாட்டோடு போராடி, தம் உரிமைகளைப் பெற்றெடுக்கும் போது தான் எமது தேசிய இறைமையும் மீட்டெடுக்கப்படும். இந்நிலையில் தான் சகல மக்களுக்கும் தேவையான உணவு, உடை, இருப்பிட வசதிகள் ஏற்படுத்தித் தரக்கூடிய ஒரு அரசை உருவாக்க முடியும். ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் பாரபட்சமின்றி நாட்டின் சகல வளங்களையும் பயன்படுத்தி, எமது சகல தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஒரு புரட்சிகர விடுதலைப் போராட்டம் இலங்கையில் வெற்றிப் பெற வேண்டுமானால், தொழிலாள ஏழைப் பெண்கள் குறிப்பாக மலையகப் பெண்களின் பங்களிப்பு மிக மிக அவசியமாகின்றது. இம்மாபெரும் உண்மையை பல நிலைகளிலும் ஒடுக்கப் பட்ட இவர்கள் உணர்ந்து போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வைக்காத வகையில், ஒரு சோசலிச ஈழத்தை உருவாக்குவதும் முடியாத காரியமாகும்.

புத்தி ஜீவிகளில் பெரும்பாலான பெண்கள் இந்த பாரியப் பொறுப்பு வாய்ந்த பணியை மிகவும் இலகுவாகச் செய்து முடிக்கக் கூடிய திறமை பெற்றவர்கள். இதன் உள்ளடக்கங்களைப் புரிந்து கொண்ட பெண்களில் பலர், ஈழ விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளில் தம்மை முழுமையாக அர்ப்பணிப்பதுடன், தமக்கு இதுவரை காலமும் மறுக்கப்பட்டு வந்த அடிப்படை உரிமைகளையும் வென்றெடுக்க ஏதுவாக இருக்கும். எனவே தான் ஈழ விடுதலைப் போராட்டம் புரட்சிகரமானதாக விளங்கவேண்டுமென பலர் எதிர் பார்க்கின்றனர்.

கயல்விழி
லண்டன்
8.9.1984.

நன்றி - தமிழ் மாது



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்